முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்.

**முன்னிலை – திரு.M. செல்வம், M.L.,**
முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
இராணிப்பேட்டை.

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8ம் நாள் புதன்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.62/2025**
**(CNR.NO.TNRP01-000386-2025)**

| | |
|---|---|
| குற்ற முறையிடுபவர் | அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>பாணாவரம் காவல் நிலையம். |
| காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | பாணாவரம் காவல் நிலைய குற்ற எண்.109/2024 |
| எதிரி | இராமகிருஷ்ணமூர்த்தி, வயது 22,<br>த/பெ சுப்ரமணி,<br>எண்.21, சின்னத் தெரு,<br>கன்னிகாபுரம் கிராமம், காட்டுப்பாக்கம்<br>நெமிலி வட்டம்,<br>இராணிப்பேட்டை மாவட்டம். |
| முறையிடப்பட்ட குற்றங்கள் | இ.த.ச. பிரிவு 363, 366, 376(2)(n), பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தை களை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1) மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின் கீழ். |

| | |
|---|---|
| வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | |
| முதல் குற்றச்சாட்டு | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1)ன் கீழ்.<br>(குழந்தையை பலமுறை தீவிர நுழைத்தலான பாலியல் தாக்குதல் செய்தல்) |
| எதிரியின் பதிலுரை | குற்றவாளி இல்லை. |
| இரண்டாவது குற்றச்சாட்டு | இ.த.ச. பிரிவு 366ன் கீழ்.<br>(திருமணம் செய்யும் நோக்கத்துடனும், பாலியல் தாக்குதல் செய்யும் நோக்கத்துடனும் பெண்ணை கடத்திச் செல்லுதல்) |
| எதிரியின் பதிலுரை | குற்றவாளி இல்லை. |
| மூன்றாவது குற்றச்சாட்டு | குழந்தை திருமணத் தடைச்சட்டம், 2006 பிரிவு 9ன் கீழ்.<br>(18 வயது பூர்த்தியடையாத குழந்தையை திருமணம் செய்தல்) |
| எதிரியின் பதிலுரை | குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் முடிவு | எதிரி குற்றவாளி அல்லர். |
| நீதிபதியின் தீர்ப்பு | எதிரி, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1), இ.த.ச. பிரிவு 366 மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்லர் என்று தீர்மானித்து எதிரியை, கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறியை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| அரசுதரப்பு வழக்கறிஞர் | திரு.A.M. சங்கர் அவர்கள். |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு P. அமர்நாத் அவர்கள் |

இந்த சிறப்பு அமர்வு வழக்கானது என் முன்பாக 24.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் வழக்கறிஞர் திரு.A.M. சங்கர் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. அமர்நாத் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

இந்த வழக்கில் அ.சா.1ன் மகளான, 30.04.2008ல் பிறந்த, 12ம் வகுப்பு படித்துள்ள, 17 வயது குழந்தை அ.சா.2 பள்ளிக்கு செல்லும் போதும், பள்ளி முடித்து வரும்போதும் அவருடன் எதிரி, சம்பவத்திற்கு முன்பு 7 மாத காலமாக பேசி, பழகி காதலித்து வந்த நிலையில், அதை அறிந்த அ.சா.2ன் பெற்றோர்கள், "எதிரிக்கு

அடிக்கடி வலிப்பு வருவதால் உன்னை திருமணம் செய்து வைக்க மாட்டோம், நீ, அவனிடம் பேசவோ, பழகவோ கூடாது என்று அ.சா.2ஐ கண்டித்ததாகவும், இருப்பினும், எதிரியின் பெரியம்மா மலர் வீட்டில் எதிரி, அ.சா.2ஐ சந்தித்து பேசி வந்ததாகவும், கடந்த 19.05.2024ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில், பாணாவரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடத்தில், எதிரியின் பெரியம்மா மலர் என்பவருக்கு சொந்தமான வீட்டில், அ.சா.2ம் எதிரியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, திடீரென்று எதிரி, அ.சா.2ஐ பாலியல் உட்கருத்துடன் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து உடலுறவு கொள்ள அழைத்தபோது, அ.சா.2 மறுத்தபோதிலும், எதிரி, "நாம் இருவரும் தப்பு செய்துவிட்டால் உன்னை வேறொருவருக்கு திருமணம் செய்து வைக்காமல் எனக்கே திருமணம் செய்து வைப்பார்கள்" என்று சொல்லி, கட்டாயப்படுத்தி தீவிர நுழைத்தலான பாலியல் தாக்குதல் செய்ததாகவும், அதன்பிறகு, 22.05.2024ஆம் தேதி அ.சா.2ஐ வேறொருவருக்கு திருமணம் செய்து வைக்க அவரது பெற்றோர்கள் ஏற்பாடு செய்ததாகவும், அதனை அ.சா.2 மூலம் அறிந்துகொண்ட எதிரி, "நாம் இருவரும் எங்கேயாவது சென்று திருமணம் செய்துகொள்ளலாம்" என்று ஆசைவார்த்தை கூறி, 23.05.2024ஆம் தேதி மாலை 06.00 மணியளவில், அ.சா.2ஐ, அவரது சட்டபூர்வ பாதுகாவலரிடமிருந்து, ஆட்டோவில் அரக்கோணம் ரயில்வே ஸ்டேஷனுக்கு கடத்திச் சென்றதாகவும், அதன்தொடர்ச்சியாக, அங்குள்ள பிள்ளையார் கோவிலில் 18 வயது

பூர்த்தியடையாத அ.சா.2ன் கழுத்தில் தாலிகட்டி எதிரி திருமணம் செய்துகொண்டு, அரக்கோணத்தில் இருந்து இரயிலில் ஏற்றி அ.சா.2ஐ ஆந்திராவிற்கு கடத்திச் சென்று அங்கு வாடகை வீடு எடுத்து தங்கவைத்ததாகவும், எனவே, எதிரி, இ.த.ச. பிரிவு 363, 366, 376(2)(n), பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1) மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என பாணாவரம் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இவ்வழக்கினை இந்நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.62/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இவ்வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து, 11.08.2025 அன்று, எதிரி மீது, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1), இ.த.ச. பிரிவு 366 மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின்கீழ் குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கி வினவ, எதிரி குற்றத்தை மறுத்ததின் பேரில் அரசுதரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :**

(4–1) பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தையின் தாயாரான அ.சா.1 தன் சாட்சியத்தில், தன் மகள் அ.சா.2, 12ம் வகுப்பு படித்துள்ளதாகவும், தன் மகள் 2006ம் ஆண்டு பிறந்ததாகவும், ஆனால், பள்ளி ஆவணங்களில் தன் மகள் 2008ம் ஆண்டு பிறந்ததாக தவறாக உள்ளது என்றும், எதிரி தனக்கு தம்பி முறை உறவினர் என்றும், 2024ம் வருடம் மே மாதம் ஒரு நாள் தன் கணவர் தன் மகளிடம் சண்டை போட்டதாகவும், அதனால், தன் மகள் வீட்டில் இருந்து, யாரிடமும் சொல்லாமல் தன் அம்மா வீட்டிற்கு போய்விட்டதாகவும், தன் மகளை தேடியும் கிடைக்கவில்லை என்றும், அதனால், பாணாவரம் காவல் நிலையத்தில் புகார் அ.சா.ஆ.1 கொடுத்ததாகவும், அதன் பிறகு, 30 நாள்கள் கழித்து தன் மகள் தன் அம்மா வீட்டிலிருந்து, தன் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டதாகவும், எதிரி தன் மகளை கடத்திச்சென்று, திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும், எதிரி தன் மகளிடம் தவறாக நடந்து கொள்ளவில்லை என்றும், தன் மகளுக்கு 18 வயது முடிந்த பிறகு, எதிரிக்கு திருமணம்

செய்து வைத்ததாகவும், தற்போது தன் மகளுக்கு ஒரு குழந்தையும் இரண்டு மாதங்களுக்கு முன்பு பிறந்துள்ளது என்றும் சாட்சியமளித்து, பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(4–2) பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற குழந்தை அ.சா.2 தன் சாட்சியத்தில், அ.சா.1 தன் தாயார் என்றும், எதிரி இராமகிருஷ்ணமூர்த்தி தன் கணவர் என்றும், தன்னுடைய பிறந்த தேதி 30.04.2006 என்றும், தான் 12ம் வகுப்பு படித்துள்ளதாகவும், பள்ளி ஆவணங்களில் தன்னுடைய பிறந்த தேதி 30.04.2008 என தவறாக உள்ளது என்றும், தானும், எதிரியும், தான் 11ம் வகுப்பு படித்ததில் இருந்தே காதலித்து வந்ததாகவும், எதிரி தன்னை கடத்திச் செல்லவில்லை என்றும், எதிரி தன்னிடம் தவறாக நடந்து கொள்ளவில்லை என்றும், தனக்கு 18 வயது முடிந்த பிறகு தானும், எதிரியும் திருமணம் செய்து கொண்டு, கணவன், மனைவியாக வாழ்ந்து வருவதாகவும், தற்போது தங்களுக்கு ஒரு ஆண்குழந்தையும் இரண்டு மாதங்களுக்கு முன்பு பிறந்துள்ளது என்றும், தான் வாலாஜா, நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் கு.வி.மு.ச பிரிவு 164ன் கீழ் அளித்த வாக்குமூலம்தான் அ.சா.ஆ.2 என்றும் கூறி, பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(4–3) அ.சா.3 திரு. முனீர்பாஷா தன் சாட்சியத்தில், தான் பாணாவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்த போது 24.05.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு அ.சா.1 காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, பாணாவரம் காவல் நிலைய குற்ற எண்.109/2024, Girl Missing–ன் கீழ் முதல்

தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஐப் பதிவு செய்து, புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் சோளிங்கர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும், பிறகு, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.1, டில்லி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 25.04.2024ம் தேதி காலை 10.45 மணிக்கு சாட்சிகள் தினேஷ், லோகேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.1ன் வீட்டின் அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், சாட்சிகள் தினேஷ், லோகேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிறகு, வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் கூறியுள்ளார்.

(4–4) அ.சா.4 திரு.லட்சுமிபதி, காவல் ஆய்வாளர் தன் சாட்சியத்தில், தான் பாணாவரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி போது, பாணாவரம் காவல் நிலைய குற்ற எண்.309/2024 வழக்கினை உதவி ஆய்வாளர் முனீர்பாஷா ஆரம்ப கட்ட விசாரணை செய்து வைத்திருந்த இந்த வழக்கினை 19.06.2024 அன்று தான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், அன்றே காலை 11.00 மணிக்கு பாதிக்கப்பட்ட சிறுமி அ.சா.2 காவல் நிலையம் ஆஜரானவரை பெண் உதவி ஆய்வாளர் வரலட்சுமியை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, வாக்குமூலத்தின் அடிப்படையில், வழக்கின் சட்டப்பிரிவை

Girl Missingல் இருந்து Sec.366, 376(1) of IPC r/w. Sec.5(l),6 of POCSO ஆக்டின் கீழ் மாறுதல் செய்து, நீதிமன்றத்திற்கு பெண் உதவி ஆய்வாளர் வரலட்சுமி பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6ஐ அனுப்பியுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(4–5) அ.சா.4 திரு.லட்சுமிபதி காவல் ஆய்வாளர் மேலும் தன் சாட்சியத்தில், பிறகு, தான் மீண்டும் அ.சா.2ஐ, பெண் உதவி ஆய்வாளர் வரலட்சுமி முன்னிலையில் விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றே அ.சா.2ஐ, பெண்காவலர் கீர்த்தனா மூலம் மருத்துவ நமுனா மூலம் அரக்கோணம், அரசு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பியதாகவும், சாட்சிகள் அ.சா.1, அ.சா.2, டில்லி, காயத்திரி, சந்தியா ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 20.06.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு பாணாவரம் காவல் நிலையத்தில் எதிரியை விசாரணை செய்ய வேண்டி கு.வி.மு.ச பிரிவு 41(A)–ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்து, எதிரி ஆஜரானதும், சாட்சிகள் பிரபாகரன், ஜெகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்து, எதிரி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அன்றே எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு காவலர்கள் மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் மூலம் உட்படுத்தியதாகவும் கூறியுள்ளார்.

(4–6) அ.சா.4 திரு.லட்சுமிபதி காவல் ஆய்வாளர் மேலும் தன் சாட்சியத்தில், 21.06.2024ம் தேதி, எதிரி மற்றும்

அ.சா.2ஐ, அழைத்துச்சென்று, தனிமையில் இருந்த கன்னிகாபுரம், மலர் என்பவரின் வீட்டில் சாட்சிகள் கருணாகரன், பூங்காவனம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகஜர் அ.சா.ஆ.7, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 தயார் செய்ததாகவும், சாட்சிகள் பிரபாகரன், ஜெகநாதன், கருணாகரன், பூங்காவனம் ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 26.04.2024ம் தேதி, வாலாஜா, நீதித்துறை நடுவர் எண்.2யிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து, சிறுமியிடம் கு.வி.மு.ச 164ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய ஏற்பாடு செய்ததாகவும், பாதிக்கப்பட்ட சிறுமி படித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. கஜலட்சுமி என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவரது பிறந்த தேதி சம்மந்தமாக சான்று அ.சா.ஆ.9 பெற்றதாகவும் கூறியுள்ளார்.

(4–7) அ.சா.4 திரு.லட்சுமிபதி காவல் ஆய்வாளர் மேலும் தன் சாட்சியத்தில், சாட்சிகள் மலர், கிருஷ்ணமூர்த்தி, கருணாகரன், பூங்காவனம், மருத்துவர்கள் அரவிந்த், பாலாஜி, நர்மதாபிரியா, ராதிகா, கலைச்செல்வி, காவலர் கீர்த்தனா, தலைமை ஆசிரியர் கஜலட்சுமி, உதவி ஆய்வாளர் முனீர்பாஷா, உதவி ஆய்வாளர் வரலட்சுமி ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரியின் ஆன்மைத்தன்மை குறித்து மருத்துவர் பாலாஜி வழங்கிய சான்று அ.சா.ஆ.10 என்றும், அ.சா.2ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 மற்றும் மருத்துவ சான்று அ.சா.ஆ.12 என்றும்,

05.08.2024ம் தேதி ஆய்வாளர் மங்கையர்கரசி அவர்கள் அரசு வழக்கறிஞரின் கருத்துரை பெற்று, வழக்கின் சட்டப்பிரிவை Sec.366, 376(1) of IPC r/w. Sec.5(l),6 of POCSOல் இருந்து Sec.363,366, 376(2)(n) of IPC r/w. Sec.5(l),6 of POCSO and Sec.9 of Prohibition of Child Marriage ஆக்டின் கீழ் மாறுதல் செய்து, நீதிமன்றத்திற்கு பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 அனுப்பியதாகவும், ஆய்வாளர் மங்கையர்கரசி புலன் விசாரணை முடித்து எதிரிமீது அதே சட்டப்பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 உடன் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை முடிந்த பின்னர், அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவப்பட்டபோது எதிரி பொய் வழக்கு என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6**. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளனவா என்பதேயாகும்.

<u>பிரச்சினைக்குரிய தீர்வு</u>

**7.** 30.04.2008ல் பிறந்த குழந்தை அ.சா.2 உடன் எதிரி பேசி, பழகி, காதலித்து வந்து, 19.05.2024ஆம் தேதி மதியம் 02.00 மணியளவில், எதிரியும், அ.சா.2ம் எதிரியின் பெரியம்மா மலர் வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, எதிரி, பாலியல் எண்ணத்துடன் அ.சா.2ஐ கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்து, நுழைத்தலான பாலியல் தாக்குதல் செய்ததாகவும், அதேபோன்று, அதே இடத்தில் இரண்டுமுறை அ.சா.2ஐ நுழைத்தலான பாலியல் தாக்குதல் செய்ததாகவும், பிறகு, 23.05.2024ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு எதிரி அ.சா.2ஐ அரக்கோணம் இரயில் நிலையத்திற்கு கடத்திச் சென்று, அங்குள்ள பிள்ளையார் கோயிலில் வைத்து, எதிரி, 18 வயது நிரம்பாத அ.சா.2ன் கழுத்தில் தாலி கட்டி திருமணம் செய்துகொண்டதாகவும், எனவே, எதிரி, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1), இ.த.ச. பிரிவு 366 மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்பது அரசுத் தரப்பு வழக்காகும்.

**8.** எதிரி மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்பது எதிரி தரப்பு வாதமாகும்.

**9.** வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற குழந்தை அ.சா.2, 30.04.2008ல் பிறந்ததாக அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், அ.சா.2ன் தாயாரான அ.சா.1 தன் சாட்சியத்தில், தன் மகள் அ.சா.2, 2006ஆம் ஆண்டு

பிறந்ததாகவும், பள்ளி ஆவணங்களில் தன் மகள் 30.04.2008ஆம் தேதி பிறந்ததாக தவறாக உள்ளது என்றும் கூறுகின்றார். அ.சா.2 தன் சாட்சியத்தில் எதிரி தன் கணவர் என்றும், தன்னுடைய பிறந்த தேதி 30.04.2006 என்றும், பள்ளி ஆவணங்களில் தன் பிறந்த தேதி தவறாக உள்ளது என்றும் கூறுகின்றார். இந்த நிலையில், ஆய்வாளர் அ.சா.4ன் மூலமாக அ.சா.2ன் பிறந்த தேதி சம்பந்தமாக, அவர் படித்த பள்ளியின் தலைமையாசிரியர் வழங்கிய சான்று அ.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.9ல், அ.சா.2ன் பிறந்த தேதி, 30.04.2008 என உள்ளபோதிலும், அதனை நிரூபிக்க அ.சா.ஆ.9ஐ வழங்கிய பள்ளியின் தலைமையாசிரியரை இவ்வழக்கில் அரசுத்தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும், அ.சா.2ன் பிறந்த தேதியை நிரூபிக்க அவரது பிறப்புச் சான்று நகல் கூட இவ்வழக்கில் சான்றாவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. இந்த நிலையில், குழந்தை அ.சா.2 மற்றும் அவரது தாயார் அ.சா.1 ஆகிய இருவருமே, 2006ஆம் ஆண்டில் அ.சா.2 பிறந்ததாகக் கூறுகின்ற நிலையில், சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகின்ற 19.05.2024ல் அ.சா.2ன் வயது 18 வயதுக்கு கீழ் இருந்தது என அரசுத் தரப்பில் நிருபிக்கத் தவறிவிட்டனர் என முடிவு செய்கிறேன்.

**10.** அ.சா.1 தன் சாட்சியத்தில், எதிரி, தனக்கு தம்பி முறை உறவினர் என்றும், தன் கணவர் தன் மகளிடம் 2024ஆம் ஆண்டு மே மாதம் சண்டை போட்டதால், தன் மகள் தன் வீட்டிலிருந்து,

யாரிடமும் சொல்லாமல், தன் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், தன் மகளைக் காணாததால் புகார் அ.சா.ஆ.1 கொடுத்ததாகக் கூறுவதோடு, எதிரி தன் மகளைக் கடத்திச் சென்று திருமணம் செய்துகொள்ளவில்லை என்றும், தன் மகளுக்கு 18 வயது முடிந்தபிறகு, தன் மகளை எதிரிக்கு திருமணம் செய்து வைத்ததாகவும், அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்துள்ளதாகவும் கூறுகின்றார்.

**11.** பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற குழந்தை அ.சா.2ம் தன் சாட்சியத்தில், தான் 12ம் வகுப்பு படித்துள்ளதாகவும், எதிரி தன்னைக் கடத்திச் செல்லவில்லை என்றும், தனக்கு 18 வயது முடிந்தபிறகு, தானும், எதிரியும் திருமணம் செய்துகொண்டு, கணவன், மனைவியாக வசிப்பதாகவும், தங்களுக்கு ஒரு ஆண்குழந்தையும் இரண்டு மாதங்களுக்கு முன்பு பிறந்துள்ளதாகக் கூறுவதோடு, கு.வி.மு.ச. பிரிவு 164ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலம் அ.சா.ஆ.2ல் உள்ள விவரங்களை போலிசார் சொன்னது போல் சொன்னதாக கூறுகின்றார்.

**12.** அ.சா.1 கொடுத்த புகாரைப் பெற்று, 24.05.2024ல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஐப் பதிவுசெய்ததாகவும், அ.சா.1ஐ விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.1ன் வீட்டின் அருகில் சம்பவ இடத்தை சாட்சிகள் தினேஷ், லோகேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாக உதவி ஆய்வாளர் அ.சா.3 கூறுகின்றார்.

**13.** இவ்வழக்கில் புலன் விசாரணை செய்த ஆய்வாளர், அ.சா.4 தன் சாட்சியத்தில், 19.06.2024ஆம் தேதி, தான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும், காவல் நிலையத்தில் ஆஜரான அ.சா.2ஐ, உதவி ஆய்வாளர் வரலட்சுமி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் சட்டப்பிரிவை Girl Missingலிருந்து மாறுதல் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6ஐத் தயார் செய்ததாகவும், அதன் பிறகு, தான், அ.சா.2ஐ, உதவி ஆய்வாளர் வரலட்சுமி முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி யதாகவும், எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி வரவழைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும், 21.06.2024ஆம் தேதி கன்னிகாபுரம் மலர் வீட்டில் சம்பவ இடத்தை சாட்சிகள் கருணாகரன், பூங்காவனம் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் அ.சா.ஆ.7, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 தயார் செய்ததாகவும், சாட்சிகள் மற்றும் மருத்துவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரியின் ஆண்மைத்தன்மை குறித்து மருத்துவர் பாலாஜி வழங்கிய சான்று அ.சா.ஆ.10 என்றும், அ.சா.2ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.11, மருத்துவ சான்று அ.சா.ஆ.12 என்றும், பிறகு, ஆய்வாளர் மங்கையற்கரசி வழக்கின் சட்டப்பிரிவை மாறுதல் செய்து, பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 தயார் செய்து, புலன் விசாரணையை முடித்து, எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறுகின்றார்.

**14.** எதிரி, அ.சா.2ஐ நுழைத்தலான பாலியல் தாக்குதல் செய்ததாகவும், கடத்திச் சென்று குழந்தை திருமணம் செய்ததாகவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் காலத்தில் அ.சா.2ன் வயது 18 வயதிற்கு கீழ் இருந்தது என்று அரசுத் தரப்பில் நிரூபிக்கத் தவறிய நிலையில், எதிரி, அ.சா.2ஐ கடத்திச் சென்றதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இருவருமே சாட்சியமளிக்காததோடு, அ.சா.2க்கு 18 வயது முடிந்தபிறகு, அ.சா.2ம், எதிரியும் திருமணம் செய்து கொண்டு கணவன், மனைவியாக வசித்து வருவதாகவும், அவர்களுக்கு ஒரு குழந்தையும் உள்ளதாகவும் அ.சா.2 மற்றும் அவரது தாயார் அ.சா.1 ஆகிய இருவருமே சாட்சியமளித்துள்ளனர். பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தை அ.சா.2 மற்றும் அவரது தாயார் அ.சா.1 ஆகிய இருவருமே அரசுத் தரப்பு வழக்கை அனுசரித்து, எவ்விதமான சாட்சியமும் அளிக்காத சூழ்நிலையில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1), இ.த.ச. பிரிவு 366 மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகளை அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, எதிரி, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 5(l) r/w 6(1), இ.த.ச. பிரிவு 366 மற்றும் குழந்தை திருமணத் தடைச்சட்டம் பிரிவு 9 ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்லர் என்று தீர்மானித்து எதிரியை, கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறியை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் ஆஜர்படுத்தப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SELVAM
Principal District and Sessions Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

முதன்மை மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.

**<u>அரசுதரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தையின் தாயார் |
| அ.சா.2 | பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தை. |
| அ.சா.3 | திரு. முனீர்பாஷா, காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.4 | திரு. லட்சுமிபதி, காவல் ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.05.2024 | புகார். |
| அ.சா.ஆ.2 | 26.06.2024 | அ.சா.2, கு.வி.மு.ச. பிரிவு 164ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலம். |
| அ.சா.ஆ.3 | 24.05.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 24.05.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | ---- | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | ---- | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 21.06.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.8 | 21.06.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | 25.06.2024 | அ.சா.2ன் பிறந்த தேதி சம்பந்தமாக அவர் படித்த பள்ளியின் தலைமையாசிரியர் அளித்துள்ள சான்று. |
| அ.சா.ஆ.10 | 20.06.2024 | எதிரியின் மருத்துவச் சான்று. |
| அ.சா.ஆ.11 | 19.06.2024 | அ.சா.2ன் விபத்து பதிவேடு. |
| அ.சா.ஆ.12 | ---- | அ.சா.2ன் மருத்துவ சான்று |
| அ.சா.ஆ.13 | 06.08.2024 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசுதரப்பு சான்றுப்பொருள் :</u>-**

இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்,</u>**
**<u>சான்று பொருட்கள்:</u>-**

இல்லை.

M SELVAM
Principal District and Sessions Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

முதன்மை மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.

## வழக்கு சுருக்கம்

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | ---- Appeared u/s 41-A CrPC Notice |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 07.03.2025 |
| 3. | சிறப்பு அமர்வு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 10.03.2025 |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 11.08.2025 |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | ------ |
| 6. | அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் / மு.வி / கு.வி.<br>அ.சா.1 / 12.11.2025 / இல்லை<br>அ.சா.2 / 12.11.2025 / 12.11.2025<br>அ.சா.3 / 11.03.2026 / 11.03.2026<br>அ.சா.4 / 17.03.2026 / 17.032026 |
| 7. | கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள். | 24.03.2026 |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | ---- |

| | | |
|---|---|---|
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றி விவரங்கள் | தடை உத்தரவு இல்லை. |

M SELVAM Principal District and Sessions Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

முதன்மை மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.

இத்தீர்ப்புரையின் நகல் மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்கள் :

1. மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை.
2. காவல்துறை கண்காணிப்பாளர், இராணிப்பேட்டை.